திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மொழி போர் தியாகி மு.வெங்கடேசன் அவர்களுக்கு திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பில்மருத்துவ உதவிக்காக 25 ஆயிரம் ரூபாய் காசோலையை மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வழங்கினர் உடன் சட்ட மன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜெ.ரமேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், மாவட்ட துணை செயலாளர் உதயமலர் பாண்டியன், ஒன்றிய நகர செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், உள்பட பலர் உள்ளனர்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதியில் கானை ஒன்றியம் மேல்காரணை மற்றும் கஞ்சனூர் அரசு பள்ளியில் பயிலும் மாணவ–மாணவிகள் பத்தாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த ஏழு மாணவ – மாணவிகளுக்கு தலா ரூபாய்.10,000/– வீதம் மொத்தம் 70,000 ரூபாய் தனது சொந்த பணத்தை மாணவர்களின் மேல்நிலை பயில்வதற்கு உதவியாக இருப்பதற்கு விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா வழங்கினார்.உடன் பள்ளி கல்வித்துறை முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் அலுவலர்கள், ஒன்றிய செயலாளர் R.P முருகன், பள்ளி தலைமை ஆசிரியர்கள், மற்றும் மாணவ – மாணவிகளின் பெற்றோர்கள் உடனிருந்தனர்.

கடலூர் கிழக்கு மாவட்டம், காட்டுமன்னார்கோயில், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம் சட்டமன்ற தொகுதி

பாக நிலை முகவர்கள் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்!

கடலூர், செப்.26- முதலமைச்சர், கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார் கோயில், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள பாக நிலை முக வர்கள் (BLA2), மற்றும் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் கள் ஆலோசனைக் கூட் டம் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை யில் நடைபெற்றது.

24-09-2025, புதன் கிழமை காலை 10.00 மணி யளவில், காட்டுமன்னார் கோயில் கிருஷ்ணா மஹா லில், காட்டுமன்னார் கோயில் காட்டுமன்னார் கோயில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார் கோயில் கிழக்கு ஒன்றியம், காட்டு மன்னார்கோயில் பேரூர், திருமுட்டம் கிழக்கு ஒன்றி யம், திருமுட்டம் மேற்கு ஒன்றியம், திருமுட்டம் பேரூர், குமராட்சி தெற்கு ஒன்றியம், குமராட்சி வடக்கு ஒன்றியம், கும ராட்சி மேற்கு ஒன்றியம், லால்பேட்டை பேரூர் ஆகிய பகுதிகளுக்கும்,

பிற்பகல் 02.00 மணியள வில் சிதம்பரம், கார்த்திகே யன் திருமண மண்டபத் தில், இளைமை யாக்கினார் கோயில் தெரு, சிதம்பரம் சிதம்பரம் நகரம், பரங்கிப் பேட்டை வடக்கு ஒன்றி யம், பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம், பரங்கிப் பேட்டை பேரூர், பரங்கிப் பேட்டை மேற்கு ஒன்றி யம், கிள்ளை பேரூர், குமராட்சி கிழக்கு ஒன்றி யம், அண்ணாமலைநகர் பேரூர், குமராட்சி மத்திய ஒன்றியம் ஆகிய பகுதிக ளுக்கும்,

மாலை 04.00 மணியள வில் குறிஞ்சிப்பாடி மங் கையர்கரசி திருமண மண் டபத்தில், வடலூர் குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன் றியம், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம், குறிஞ் சிப்பாடி பேரூர், வடலூர் நகரம், கடலூர் கிழக்கு ஒன்றியம், கடலூர் மேற்கு ஒன்றியம் ஆகிய பகுதிக ளுக்குட்பட்ட பாக நிலை முகவர்கள்(BLA2), தேர்தல் ஒருங்கிணைப்புகுழு ஒருங் கிணைப்பாளர்கள் கூட் டங்கள் நடைபெற்றது.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கட லூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர். கே. பன்னீர் செல்வம் தலைமை தாங்கி சிறப்புரை யாற்றினார்.

இந்நிகழ்வில், ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்து சாமி, வி.சிவக்கு மார், த.ஜெயபாண்டியன், ஆர்.நாராயணசாமி, தங்க. ஆனந்தன், கே.ஆர்.ராயர், கே.ஆர்.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், தெ. காசிராஜன், பி.சுப்பிர மணியன், ஏ.எஸ்.மதியழ கன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேல் வி.ஜி.பி.சபா நாயகம், டி.திருமூர்த்தி,வி. பி.பாலு, பா.திருமாவளவன், பி.சுந்தரபாண்டியன், ஆர்.கலையரசன், எம். மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நட ராஜன், ம.சோழன், வி.கே.விந்தசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ஞான சேக ரன், பொதுக்குழு உறுப்பி னர்கள் கே.பி.ஆர்.பாலமு ருகன், த.ஜேம்ஸ் விஜய ராகவன்,ச.கல்யாணசுந்த ரம், என்.டி.கணேசன்,ர. மஞ்சு, நகர கழக செயலா ளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலை வர் சு.சிவக்குமார்,

பேரூர் செயலாளர்கள் எஸ்.கணேசமூர்த்தி, கு. வே.ப.ஜெய்சங்கர், தேன் மொழி சங்கர், பூ.செல்வகு மார், க.பழனி,எம்.அன்வர் சதாத், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன் னாள் இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செய லாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தென்காசியில் மாநில அளவிலான அடைவுத் தேர்வு!

பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நடைபெற்றது!

தென்காசி.செப்.26.

தென்காசி மாவட்டம் ஆய்க் குடி ஜே.பி.பொறியியல் கல்லூரி யில் 24.09.2025 அன்று மாநில அளவிலான அடைவுத்தேர்வு 2025 (SLAS) பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கி ஷோர் முன்னிலை யில் நடை பெற்றது.

பின்னர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்ததாவது.

தென்காசி மாவட்டத்தில் கற்றல் அடைவு மிகச்சிறப்பாக உள்ளது.தமிழ் நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் தென்காசி மாவட டத்தில் கற்றல் அடைவு 4 வது இடத்தில் உள்ளது.12 ஆம் வகுப்பை பொறுத்தவரைக்கும் 94 சதவீதம் தேர்ச்சி அடைந்துள் ளனர். ஆசிரியர்கள் அனைவரும் ஆசிரியர் தேர்வு வாரியம் பற்றிய எதிர்மறை எண்ணம் இல்லாமல் நேர்மறை எண்ணத்துடன் பள் ளித் தேர்வில் மட்டுமல்லாமல் பொதுத்தேர்விலும் அதிக கவ னம் செலுத்த வேண்டும். தென் காசி மாவட்டத்தில் உள்ள பள்ளிக் குழந்தைகள் கற்றல் அடைவில் முன்னேறி வருவது மிகப்பெரிய உற்சாகத்தை கொடுத்துள்ளது. கல்வியில் சிறந்த தமிழ்நாடு என் னும் கல்வி எழுச்சி விழாவினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர் கள் தொடங்கி வைக்க உள்ளார் கள்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடக்கக் கல்வி இயக்குநர் (சென்னை) முனைவர் பூ.ரமேஷ், ஒருங்கிணைந்த பள் ளிக்கல்வி இணை இயக்குநர் (சென்னை) முனைவர் வை. குமார், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர்.பி.கோல்டா கிரேனா ராஜாத்தி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரெஜினி,மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) கண்ணன், மற்றும் தென்காசி மாவட்ட பள்ளிக் கல்வித்துறை தலைமையாசிரியர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்னியூர் தொகுதியில் பத்தாம் வகுப்புத் தேர்வில் முதலிடம் பெற்ற

7 மாணவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் ரூ.70 ஆயிரம் நிதி உதவி!

அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. தமது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்!

விழுப்புரம், செப். 26–

விக்கிரவாண்டி சட்டப்பேர வைத் தொகுதிக்குட்பட்ட இரு அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ.10 ஆயிரம் நிதியுதவியை அன் னியூர் அ.சிவா எம்.எல்.ஏ. வழங்கினார்.

காணை ஒன்றியத்திலுள்ள காரணைபெரிச்சானூர், கஞ்சனூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கடந்த கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் கிராமப்புறப் பகுதிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் 7 பேர் முதல் மூன்று இடங்களைப் பிடித்தனர்.

இதைத் தொடர்ந்து இந்த மாணவ, மாணவிகள் பேரையும் கடந்த செவ்வாய்க்கிழமை தனது அலுவலகத்துக்கு வரவழைத்த விக் கிர வாண்டி எம்.எல்.ஏ. அன்னி யூர் அ.சிவா, தனது சொந்த நிதியிலி ருந்து தலா ரூ.10 ஆயிரம் நிதியுதவி வழங்கி வாழ்த்தினார்.

நிகழ்வில் விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரெ. அறிவழகன், பள்ளித் தலைமையா சிரியர்கள் எட்வின் ஜோசப், முரு கன், கல்வி மேலாண்மைக் குழு வைச் சேர்ந்த முருகன் மற்றும் மாணவ, மாணவிகளின் பெற்றோர் கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திண்டுக்கல் மற்றும் வேடசந்தூர்
சட்டமன்றத் தேர்தல் - 2026
நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திற்கு
ஒருகை தரும்

மாண்புமிகு.
இ.பொியசாமி B.A., BGL., அவர்களையும்
ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச்செயலாளர்

மாண்புமிகு.
திருச்சி சிவா M.A., B.L., MP., அவர்களையும்
மாநிலங்களவைக் குழுத் தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர்

மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள் / முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்று மகிழ்கிறோம்...

நாள் : 26.09.2025
நேரம் : மாலை 5.00 மணி
இடம் : தரகு மண்டி குமாஸ்தாக்கள் திருமண மண்டபம், திண்டுக்கல்.

நாள் : 26.09.2025
நேரம் : மாலை 6.00 மணி
இடம் : தனுஷ் மஹால், எரியோடு, வேடசந்தூர்.

ஏரகஏற்று மகிழும்...

அர.சக்கரபாணி B.A.,
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர்

I.P.செந்தில்குமார் M.A., B.L.,
திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர்
பழனி சட்டமன்ற உறுப்பினர்

திண்டுக்கல் மாவட்ட தி.மு.க.